2022 மே 10]

திரு. A.K. செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேட்டுப்பாளையம் நகரத்திற்கு புறவழிச் சாலை அமைப்பது தொடர்பாகவும், சிறுமுகை, லிங்காபுரம் தாலுகா பகுதிகளில் இருக்கிற காந்தவியல் பகுதியில் ஓர் உயர்மட்டப் பாலம் கட்டுவது சம்பந்தமாகவும் ஏற்கெனவே நான் இந்த அவையில் பேசியிருக்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், நன்றி. நான் அதனைப் பதிவு செய்து விட்டேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதற்கு பதில் வாங்கித் தருவார்கள். (குறுக்கீடு) போதும், உட்காருங்கள். (குறுக்கீடு) போதும்.

(எ) போளூர், பள்ளி மேற்கூரை இடிந்து விழுந்து மாணவர் உயிரிழந்தது, நிவாரணம் வழங்குதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி, ஒரு வரியில் சொல்லி முடியுங்கள்.

திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போளூர் சட்டமன்றத் தொகுதி, போளூரில் கடந்த ஒரு வாரத்திற்கு முன்பு +1, +2 படிக்கின்ற மாணவர்கள் விடுதியில் இரவில் தூங்கிக்கொண்டிருந்தபோது, மேற்கூரை இடிந்து விழுந்ததன் காரணமாக சம்பவ இடத்திலேயே +1 மாணவர் ஒருவர் உயிரிழந்திருக்கிறார். மற்றொரு மாணவர் படுகாயம் அடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, சிகிச்சை பெறுகிறார். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிவாரண நிதியிலிருந்து சிகிச்சைக்காக அந்த மாணவருக்கு . . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், அரசின் கவனத்திற்கு இதனைக் கொண்டு வந்திருக்கிறீர்கள். வேண்டிய உதவிகள் கிடைக்கும். (குறுக்கீடு) வேண்டிய உதவிகள் கிடைக்கும்.

(ஏ) வேளச்சேரி தொகுதி, இஸ்லாமியர்களுக்கு தனி இடுகாடு அமைத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. JMH. அசன் மௌலானா அவர்கள், ஒரு வரியில் சொல்லி முடியுங்கள்.

திரு. JMH. அசன் மௌலானா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளச்சேரி சட்டமன்றத் தொகுதியில் இஸ்லாமியர்களுக்கு என்று ஒரு தனி இடுகாடு இல்லை. இடுகாடு அமைத்துத் தருமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்களைத் தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.*

4. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

(அ) தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2022

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2022 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத் (திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2022 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத் (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.*